1993 ஏப்ரல் 8]

28—

கடலூர் ஒன்றியத்தில் புதிய நீர்த்தேக்கக் குளங்கள் கட்டுதல்.

*9816—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுக்கா, கடவூர் ஒன்றியத்திலுள்ள வாழ்வார்மங்கலம், தேவர்மலை கிராமங்களில் புதிய நீர்த்தேக்கக் குளங்கள் கட்டும் பணி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். இரண்டு திட்டங்களும் ஆய்வில் உள்ளன.

(ஆ) திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்தில், வாழ்வார்மங்கலத்தில் புது ஏரி அமைக்கும் திட்டமும் சாலை கரைப்பட்டியை சேர்ந்த காளையம்பட்டி மற்றும் தேவர்மலை கிராமம் வழியாக காளையப்பட்டி செல்லும் கருமலைஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் திட்டமும் ஆய்வில் உள்ளது. அரசு அதை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழ்வார்மங்கலம் கிராமத்தில் புதிய ஏரி அமைக்கின்ற திட்டத்திற்கான மதிப்பீடு 11 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய். அதேபோல், தேவர் மலைக் கிராமத்திலே, சாலைக்கரைப்பட்டி அருகே, காளையப்பட்டி மற்றும் தேவர்மலை கிராமத்திற்குப் பக்கத்திலே புதிய ஏரி அமைக்கின்ற பணிக்கு தேவைப்படுகின்ற திட்ட மதிப்பீடு 25 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய். இந்த இரண்டு திட்டங்களும் அரசின் ஆய்விலே இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நடப்பாண்டு திட்டத்தில் இதனை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழ்வார்மங்கலம் கிராமத்திலே ஏரி அமைக்கின்ற பணியை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்காகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த தேவர்மலை கிராமத்தின் குறுக்கே புதிதாக கட்டுகின்ற அந்த ஏரிக்கு விகிதாசாரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே நில நிர்வாக ஆணையாளர் அவர்கள் 'தி பெனிபெட் காஸ்ட் ரேஷியோ' என்று சொல்லப்படுகின்ற அந்த விகிதாசாரம் குறைவாக இருக்கிறது என்று கருத்து தெரிவித்து, அதை புஞ்சை ஆயக்கட்டிலே சேர்த்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று மறுபடியும் நம்முடைய துறையின் மூலம் திருப்பி அனுப்பியிருக்கிறோம். ஆக இந்தப்பணி கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். அந்த ஒப்புதலைப் பெற்றபின்னாலே தான் அதை அறிவிக்கமுடியும். ஆகவே இரண்டாவது பணி கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். முதல் பணி இந்த ஆண்டு செய்வதற்கான பரிசீலனையில் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 289 திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

289—

வேளாண்மைக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம்.

*10283—திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —:

(அ) வேளாண்மைக்குத் தற்பொழுது இலவசமாக வழங்கப்படும் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1—8—1990 முதல் அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இந்த நல்லதொரு பதிலை அமைச்சர் பெருமகனார் அளித்ததற்கு விவசாய மக்களின் சார்பாக நான் நன்றியறிதலைத் தெரிவித்துக்